29th August 1961]

SRI M. KALYANASUNDARAM : நம் சட்டசபை சட்டத்திற்கு உட்பட்டு முறையாக நடக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதன் அர்த்தம் இங்கே சிலரைப்பற்றி விமரிசனம் செய்வதையெல்லாம் அப்படியே பிரசுரிக்க முடியும் என்பதல்ல. தனி நபர் பற்றியோ அல்லது ஒரு ஸ்தாபனம் பற்றியோ இங்கே பேச உரிமை இருக்கிறது. அந்த நடவடிக்கைகளை அப்படியே பிரசுரித்தால் கட்டாயம் அவர்கள் பாதுகாக்கபடமாட்டார்கள். பொது மக்கள் இங்கே நடக்கக்கூடிய நடவடிக்கைகளை அறிந்து கொள்ளும் முறையில் பத்திரிகைகள் அவைகளை அப்படியே பிரசுரிக்க வேண்டுமென்று உத்தேசித்து இந்த மாதிரியான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கேகூட தனிப்பட்டவர்களைக் குறித்து அவதூறாக பேசுவது கிடையாது. அவதூறாகப் பேசாமல், அவர்களுடைய நடவடிக்கைகளில் குற்றம் கண்டுபிடித்துப் பேசினால் அவைகளை இப்போதும் பிரசுரிக்கலாம். அதில் தவறு ஒன்றும் கிடையாது. தனிப்பட்டவர்களைப்பற்றி டெஃபமேஷன் குற்றம் வரும்படியான அளவுக்கு இங்கே பேசினால் அதைப் பிரசுரம் செய்ய வேண்டுமானால், அந்த சுதந்திரம் இல்லாமல் இருப்பது நல்லது.

SRI M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் சொல்லும் சமாதானத்தை ஒத்துக்கொள்ளுவதானால், பார்லிமெண்ட்டில் சட்டவிரோதமான நடவடிக்கைகள் நடக்கின்றன. அதனால்தான் அங்கே இத்தகைய ஒரு சட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கு எந்த சூழ்நிலையில் இந்தச் சட்டத்தை ஏற்படுத்தினார்களோ, நம் சூழ்நிலையைப் பொருத்த வரையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை என்ற முடிவுக்குத்தான் வந்திருக்கிறோம். பார்லிமெண்டில் அங்கு இருக்கும் நிலைமையை ஆலோசித்து சட்டம் செய்கிறார்கள். நம்முடைய நிலைமையைத்தான் விளக்க முடியுமே தவிர மற்றவர்களுடைய நிலைமையைப்பற்றி விளக்க முடியாது.

Poramboke lands (Assignment of)

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of question No. 1466 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

1466 *Q.*—SRI A. R. MARIMUTHU : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா நெம்மேலி திப்பியக்குடி கிராமத்திலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்யவேண்டுமென்று விவசாயிகளால் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

(இ) அவைகளின்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir. Petitions were received in respect of certain lands.

(*b*) The question of assignment of the lands to the applicants will be taken up after the question of granting a patta to Sri Jagannatha Gopalar in respect of these lands, is decided as the lands are in his possession.

Eleventh Standard in High Schools

*1467 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Finance be pleased to state the reasons for including the Eleventh **Standard** in High Schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : Under the reorganized pattern of Education, Secondary Education is a four-year course, in Standards VIII to XI. The XI Standard has therefore to be included in High Schools.

SRI A. A. RASHEED : When will the XI Standard be introduced in all the high schools in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry I am not in a position to answer that question.

SRI K. VINAYAKAM : What would be the nature of curriculum of study in this XI Standard? Would it cover the syllabus that is now gone through in the Pre-University course in the colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. That is the idea. The syllabus has already been framed.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்த 11-வது படிவம் உயர்நிலைப் பள்ளியோடு சேர்க்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்தக் காலத்தில் சேர்க்கப்பட்டு பூர்த்தியாகும் என்று சொல்ல முடியாது என்று சொன்னார்கள். ஆரம்ப நடவடிக்கையாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆரம்ப நடவடிக்கையாக 1962-63-ல் ஆரம்பிக்க வேண்டும் என்று முதலில் முடிவு செய்தோம். இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலைகளைப் பார்த்ததில், அடுத்த வருஷம்கூட முடியாது என்பதுதான் எனது கருத்து. பூர்வாங்கமாக பரிசீலனை செய்து எதிலே வைப்பது நல்லது, மாற்றம் வேண்டுமா என்று பரிசீலிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். அதனால்தான் முடிவு சொல்ல முடியாதிருக்கிறது.